அங்கத்தினரே, அரசாங்கம் ஆடுகளை எந்த முறையிலே வளர்க்கிறது, ஆடுகள் இன விருத்திக்காக அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது என்பவற்றை விளம்பரப்படுத்துவது போன்ற நல்ல காரியங்களிலே ஈடுபடலாம்.

மேட்டூர் அணையில் மீன் பிடிப்பு.

* 153 வினா : **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் அணையில் 1968, எப்ரல் முதற்கொண்டு மீன் பிடிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் அளவு 30 அடிக்குக் குறைவாக இருக்கையில் அங்கு மீன் பிடிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது. தண்ணீர் மட்டம் 15 அடிக்குக் கீழே சென்றால், யமனேரிக்கெண்டை, கெண்டை, பூனைமீன்கள் (Cat Fish) ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக, யமனேரிக் கொண்டை வலைகள் அனைத்தும் நிறுத்தப்படுகின்றன.

சாக்கடை அமைப்புத் திட்டங்கள்.

* 154 வினா : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

1967-68-ல் எத்தனை நகரங்களில் அரசு சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திருமங்கலம் நகர பஞ்சாயத்தின் ஒரு பகுதி வடிகால் திட்டம் 1967-68-ல் முடிவடைந்தது. மற்ற இடங்களில் வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டிருக்கிற பேரூராட்சிகளில் இந்த சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சிதம்பரம், மன்னார்குடி, கும்பகோணம், தூத்துக்குடி, பெரியகுளம், சாத்தூர், லால்குடி, ஆகிய நகராட்சிமன்றங்களில் இது போன்ற பெரிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். அதில் கோயம்புத்தூர் முனிசிபாலிடியில் இப்பொழுது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. சிதம்பரம் முனிசிபாலிடியில் 1968-69-க்குள் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. உதகமண்டலத்திலும் இது போன்ற ஜலதாரைத் திட்டம் (டிரைனேஜ் சிஸ்டம்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய திட்டங்களாக இவைகளெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. திருச்சிராப்பள்ளி, காஞ்சி, கடலூர், சேலம், திருநெல்வேலி, ஆலந்தூர் ஆகிய இடங்களில் ஜலதாரைத் திட்டங்களைப் பழுது பார்க்கவேண்டும் என்பதற்கான செயற்குறிப்புகள் இங்கே இருக்கின்றன. இருந்தாலும், இப்பொழுது அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான அளவுக்கு போதுமான நிதி இல்லாத காரணத்தினால், இவைகளெல்லாம் தாமதப்பட்டு வருகின்றன.

Payment of college fees by Harijan students

* 155 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Department of Harijan Welfare has issued cards guaranteeing the payment of the college fees to the students belonging to the Scheduled Caste/Tribes intending to join the college course;

(*b*) whether suitable instructions have been given to colleges to honour these cards; and

(*c*) whether any incidents have been brought to the notice of the Government where a few colleges including the Government Arts College, Mount Road, Madras-2 have refused to accept guarantee of these cards and insisted payment of fees at the time of admission itself ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம். அரிசனங்கள், பழங்குடி மக்கள் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் படிப்புக் கட்டணம் முதலியவையின்றிக் கல்லூரிகளில் சேர இயலும்படியாக அவர்களுக்குத் தகுதி அட்டைகள் வழங்கப்படுகின்றன. இந்திய அரசு தரும் படிப்பு உதவித் தொகையைப் பொறுத்தவரை மட்டுமே இந்தச் சலுகை வழங்கப்படுகின்றது.

(இ) ஆம்.

(உ) முக்கியமாக மதுரையில் உள்ள மாணவர்களிடமிருந்தும், சமூக நிறுவனங்களிடமிருந்தும் கல்லூரிகளின் முதல்வர்கள் இந்தத் தகுதி அட்டைகளை ஏற்க மறுத்ததாக முறையீடுகள் வந்தன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கல்லூரி முதல்வர்கள் இந்தத் தகுதி அட்டைகளை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்பதன் காரணமாக பல்வேறு இடங்களில் இத்தகைய புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அரசு இது குறித்து மீண்டும் பரிசிலனை செய்து, கல்லூரி முதல்வர்களுக்கு ஒரு திட்டமான உத்தரவு போட்டு, இந்த அட்டைகளை யார் கொண்டுவந்தாலும் அப்படிச் செய்யக்கூடாது என்று வலியுறுத்தினால் அரிசனங்களுக்கு நன்மை செய்யக்கூடிய நிலைமை இருக்காதா ? அத்தகைய அட்டைகளை எப்படி நிராகரிக்கிறார்கள் என்றால், அலட்சியமாக சில தவறான வார்த்தைகளை பயன்படுத்துகிறார்கள், தாறுமாறாக பேசி அரிசன மக்களை அலட்சியப்படுத்திப் பேசக்கூடிய நிலைமை இருக்கிறது. அரிசன மக்களை அப்படி அலட்சியப்படுத்திப் பேசக்கூடிய அளவுக்கு முதல்வர்களுடைய போக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தை அரசாங்கம் கண்காணிக்கத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த அட்டை கொடுக்கின்ற முறை புகுத்தப்பட்ட ஆரம்பத்தில்தான் இப்பேற்பட்ட வேறுபாடுகள் கல்லூரி முதல்வர்களால் காண்பிக்கப்பட்டதாக தகவல்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்குப் பிறகு நலத்துறை அதிகாரி நடவடிக்கை எடுத்து, எல்லா முதல்வர்களுக்கும் இந்த அட்டைகளை அலட்சியப்படுத்தக்கூடாது என்று அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு இப்பொழுது அதுபோன்ற சூழ்நிலைகள் இருக்கவில்லை என்பதாகத்தான் குறிப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் **வெள்ளிக்குறி** (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி

எல்லா உறுப்பினர்களும் அறியும்படி வினாக்களுக்கு விடையளித்தல்.

திரு. எம். சுரேந்திரன் : ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர், ஸார். சபாநாயகர் அவர்களே, கேள்வி 115-ல் உபகேள்வி ஒன்றை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டு, மாண்புமிகு வருவாய்த்துறை